**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

**Date : 13.11.2025**

**SC. 77/2022**

**அ.சா 9 – பாலமுருகன் த/பெ கருப்பன்னன், காவல் ஆய்வாளர்**

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ம் நாள் **பாலமுருகன்** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **பாலமுருகன்** | தந்தை பெயர் | **கருப்பன்னன்** |
| வயது | 59 | கிராமம் | நீலகிரி |
| வட்டம் | நீலகிரி | மாவட்டம் | நீலகிரி |

**( எதிரிகள் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**முதல் விசாரணை : –**

1. நான் தற்போது நீலகிரி மாவட்டம் , புதுமந்து காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு 2015 ல் சூளகிரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வந்தேன். கடந்த 15.08.2015 ம் தேதி நான் நிலைய அலுவலில் இருந்த போது ஒசூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற அறிவிப்பை பெற்று ஒசூர் அரசு மருத்துவமனை சென்றும் அங்கு சிகிச்சை பெற்று வந்த R. மணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், அதிகாலை 4.00 மணிக்கு நிலையம் வந்து சூளகிரி காவல் நிலைய குற்ற எண் 574/2015 ச/பி 394 , 397 இதச வாக வழக்கு பதிவு செய்தும், முதல் தகவல் அறிக்கையும், புகார் வாக்குமூலத்தையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், இவ்வழக்கின் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 15.08.2015 ம் தேதி காலை 7.00 மணிக்கு சம்பவ இடம் சென்றும் சாட்சிகள் மனோகரன் மற்றும் சுந்தரம் ஆகியோர் முன்னிலையில்

சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தும், பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். நான் தயார் செய்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா 4 ன் மூலமாக அ .சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் தயார் செய்த மாதிரி வரைபடம் **அ.சா,ஆ 13** ஆகும். இவ்வழக்கின் சாட்சிகள் 1. மணி 2. கலைஞர் , 3. வெங்கடராமன் 4. நரசிம்மா 5. மனோகர் 6. சுந்தரம் 7. மாதப்பன் 8. லட்சுமணன் 9. சின்னசாமி 10. சுப்ரமணி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் . பின்னர் இவ்வழக்கில் சம்பவ இடத்தை பார்வையிட்டதிலிருந்தும் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலத்தை பதிவு செய்ததில் இருந்தும், சம்பவம் உண்மையென தெரியவந்ததன் பேரில் கடந்த 31.08.2015 ம் தேதி சாட்சிகள் ரமேஷ் மற்றும் ஈஸ்வரன் முன்னிலையில் புலியரசி காட்டில் சூளகிரி – பேரிகை ரோடு அருகே நடந்து சென்ற எதிரிகள் 1. R. மஞ்சுநாத் 2. R.R. மஞ்சுநாத் 3. A. மஞ்சுநாத் 4. சுவாமிநாதன் 5. மாதேஷ் ஆகியோர்களை ரகசிய தகவலின் பேரில் பிடித்து விசாரித்தும், தனது குற்றங்களை ஒப்பு கொண்டவர்களை கைது செய்தும், சாட்சிகள் ரமேஷ் மற்றும் ஈஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் முதலாம் எதிரி R. மஞ்சுநாத் தனாக வந்து கொடுத்து ஒப்புதல் வாக்குமூலத்தை அன்றைய தினம் மாலை 16.30 மணிமுதல் 17.30 மணிமுதல் பதிவு செய்து , கையெழுத்து பெற்றேன் . **எதிரி R. மஞ்சுநாத் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான எங்களை கூட்டி போன செல்போனையும், செலவு போக மீதத் தொகை ரூ. 7500 /– ஐயும், எனது வீட்டில் மறைத்து வைப்பதை எடுத்து ஒப்படைக்கிறேன் என்ற பகுதி மட்டும் அ.சா,ஆ 14 ஆகும்.** இவ்வழக்கின் 2 ம் எதிரியை R.R மஞ்சுநாத் அதே சாட்சிகள் முன்பு தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 17.30 மணிமுதல் 18.30 மணிவரை பதிவு செய்தேன். **எதிரி R.R மஞ்சுநாத் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான எங்களை கூட்டி போன இரும்பு ராடையும், செல்போனையும், செலவு போக மீதத் தொகை ரூ. 7500 /– ஐயும், எனது வீட்டில் மறைத்து வைப்பதை எடுத்து ஒப்படைக்கிறேன் என்ற பகுதி மட்டும் அ.சா,ஆ 15**

**ஆகும்.** , இவ்வழக்கின் 3 ம் எதிரியை A மஞ்சுநாத் அதே சாட்சிகள் முன்பு தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 18.30 மணிமுதல் 19.30 மணிவரை பதிவு செய்தேன். **எதிரி A மஞ்சுநாத் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான எங்களை கூட்டி போன செல்போனையும், செலவு போக மீதத் தொகை ரூ.7500 /– ஐயும், எனது வீட்டில் மறைத்து வைப்பதை எடுத்து ஒப்படைக்கிறேன் என்ற பகுதி மட்டும் அ.சா,ஆ 16 ஆகும்.** இவ்வழக்கின் 4 ம் எதிரியை சாமிநாதன் அதே சாட்சிகள் முன்பு தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 19.30 மணிமுதல் 20.30 மணிவரை பதிவு செய்தேன். **எதிரி சாமிநாதன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான எங்களை கூட்டி போன Bajaj discover TN 70 C 7015, செல்போனையும், செலவு போக மீதத் தொகை ரூ.7000 /– ஐயும், எனது வீட்டில் மறைத்து வைப்பதை எடுத்து ஒப்படைக்கிறேன் என்ற பகுதி மட்டும் அ.சா,ஆ 17 ஆகும்.** இவ்வழக்கின் 5 ம் எதிரியை மாதேஷ் அதே சாட்சிகள் முன்பு தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 20.30 மணிமுதல் 21.30 மணிவரை பதிவு செய்தேன். **எதிரி மாதேஷ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான எங்களை கூட்டி போன செல்போனையும், செலவு போக மீதத் தொகை ரூ.7500 /– ஐயும், எனது வீட்டில் மறைத்து வைப்பதை எடுத்து ஒப்படைக்கிறேன் என்ற பகுதி மட்டும் அ.சா,ஆ 18 ஆகும்.** இவ்வழக்கின் எதிரி R. மஞ்சுநாத் என்பவர் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னபடி தனது வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் படுத்திய கிரே கலர் அப்பாச்சி TN 70 C 4362 இரு சக்கர வாகனம் ஒன்று ( **குற்ற எண் 563/2015 க்கும் சம்மந்தப்பட்டது)** செல்போன் ஒன்று , பணம் ரூ. 7500 /– ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் 31.08.2015 ம் தேதி 22.30 மணியைபோல் கைப்பற்றி அதற்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கையொப்பங்கள் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா,ஆ 19** ஆகும். இவ்வழக்கின் எதிரி RR. மஞ்சுநாத் என்பவர் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னபடி தனது வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் படுத்திய இருப்பு ராடு – 1 ,

செல்போன் –1 , பணம் ரூ. 7500 /– ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் 31.08.2015 ம் தேதி 23.00 மணியைபோல் கைப்பற்றி அதற்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கையொப்பங்கள் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா,ஆ 20** ஆகும். இவ்வழக்கின் எதிரி A. மஞ்சுநாத் என்பவர் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னபடி தனது வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் படுத்திய , கத்தி –1 , ( குற்ற எண் 563/2015 க்கு சம்மந்தப்பட்டது) செல்போன் –1 , பணம் ரூ. 7500 /– ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் 31.08.2015 ம் தேதி 23.30 மணியைபோல் கைப்பற்றி அதற்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கையொப்பங்கள் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா,ஆ 21** ஆகும். இவ்வழக்கின் எதிரி சுவாமிநாதன் என்பவர் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னபடி தனது வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் படுத்திய Bajaj Discover TN 70 C 7015 , ( இந்த வாகனம் குற்ற 563/2015 க்கும் சம்மந்தப்பட்டது) , செல்போன் –1 , பணம் ரூ. 7000 /– ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் 01.09.2015 ம் தேதி 00.15 மணியைபோல் கைப்பற்றி அதற்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கையொப்பங்கள் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா,ஆ 22** ஆகும். இவ்வழக்கின் எதிரி மாதேஷ் என்பவர் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னபடி தனது வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் படுத்திய செல்போன் –1 , பணம் ரூ. 7500 /– ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் 01.09.2015 ம் தேதி 1.00 மணியைபோல் கைப்பற்றி அதற்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கையொப்பங்கள் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா,ஆ 23** ஆகும். பின்னர் எதிரி மற்றும் சொத்துக்களை தகுந்த பாதுகாப்புடன் காவல் நிலையம் சென்றும், கைப்பற்றிய சொத்துக்களுக்கு படிவம் 91 தனித்தனியாக தயார் செய்தும் எதிரியும் , கைப்பற்றிய பொருட்களையும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். நான் தயார் செய்த படிவம் 91 ( 5 எண்ணிக்கை) **அ.சா,ஆ 24 முதல் அ.சா,ஆ 28 வரை** ஆகும். பின்னர் இவ்வழக்கின் எதிரிகளை அடையாளம் காட்ட கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் தேன்கனிக்கோட்டை

அவர்களுக்கு அடையாள அணிவகுப்பு நடத்த வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டு பின்னர் கடந்த 07.10.2015 ம் தேதி அவர் சேலம் மத்திய சிறையில் வைத்து அடையாள அணிவகுப்பை நடத்தினார். அதில் சாட்சிகள் 1. R. மணி 2. கலைஞர் 3. வெங்கடராமன் 4. நரசிம்மா ஆகியோர்கள் கலந்து கொண்டு எதிரிகள் 1. R. மஞ்சுநாத் 2. RR. மஞ்சுநாத் 3 A. மஞ்சுநாத் ஆகியோர்களை சரியாக அடையாளம் காட்டினார்கள் பின்னர் , இவ்வழக்கின் சாட்சிகள் வாக்குமூலத்தின் படி சட்டப்பிரிவு 394, 397 இதவ வில் இருந்து ச/பி 395 உ/இ 397, 506 ( II) இதசவாக சட்டப்பிரிவுகளை மாற்றி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன் பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது ச/பி 395 உ/இ 397, 506 ( II) இதசவாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur